**நாள்: 24.03.2026.**
**O.S. No. 57/2019**
**பெயர்: முருகேசன். த/பெ. பாவாடைசாமி**
**வா.சா.1**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் தான் வழக்கிற்கான விபரங்களை கூறினேன் என்றால் சரிதான். நான் 1993 ஆம் ஆண்டில் கிரையம் வாங்கிய சொத்தில் வீடு கட்டினேன் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு வடக்கு பக்கம் அருணாச்சல வகையறாவின் சொத்து உள்ளது என்றால் சரிதான். அருணாச்சல வகையறாவிற்கு சொத்திற்கு அடுத்து வடக்கு பக்கத்தில் முருகானந்தம் என்பவரின் சொத்து உள்ளது என்றால் சரிதான். முருகானந்தம் சொத்திற்கு அடுத்து வடக்காக வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வீட்டின் தென்புற சுவற்றிற்கு தெற்கே காலிமனையும், மூங்கில்குத்தும் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்த தெற்கே அகரத்தெரு உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெறப்பட்ட முன்பே எத்தனை வருடங்களாக மூங்கில்குத்துக்கள் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், வடக்கில் உள்ள சொத்திற்கும், தென்பக்கம் காலி மனைக்கும் கிழக்கே – தெற்கு வடக்காக ஒரு பாதை அகரத்தெருவில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் அகரத்தெருவிலிருந்து எனது வீட்டிற்கு பாதை வசதி உரிமை கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள மனையில் உள்ள மூங்கில்குத்து தொடர்பாக பிரச்சனை செய்வது பிரதிவாதி குடும்பம் மட்டுமே என்றால் சரிதான். எனது வீட்டின் தென்புறம் உள்ள மூங்கில்குத்துக்களும் மனையும் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி பிரச்சனை செய்ததாக கூறப்படுவது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாரை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அயல்நாட்டிற்கு அடிக்கடி போய் வருவார் என்றால் சரிதான். பிரதிவாதி பிரச்சனை செய்ததாக கூறப்படும் நாளிலிருந்து எவ்வளவு

நாளில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் இரண்டு மாதங்களில் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதி, எதிர்வழக்குரையில் கூறியுள்ள விபரங்களை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு வழக்குரையில் சொத்து விபரத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டின் தென்புற சுவருக்கு தெற்கே உள்ள மனையிலும், மூங்கில்குத்திலும் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரிதான். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி செய்தேன் என்றால் சரிதான். தற்போதுதான் கிரையம் வாங்கி வீடு கட்டியுள்ள மனையில், எனக்கு முன்னர் பல பேர் வாங்கி விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் மனையானது, 1945ம் ஆண்டில் மலைப்பெருமாள் என்பவர் அனுபவித்தில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் தாத்தாவும், அவருடைய சகோதரர்களும் 1945ல் ஒரு பாகப்பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே வருடம், என் வீட்டிற்கு தென்புறம் உள்ள மனை, பிரதிவாதியின் குடும்பத்திற்கு வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள மனை யாருக்கு சொந்தமானது என்றால் அரசுக்கு சொந்தமானது. எனது வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள மனை அரசுக்கு சொந்தமானது இல்லை என்றாலும், பிரதிவாதிக்கு சொந்தமானது என்று சொன்னாலும் சரியல்ல. அந்த மனை 5 குழி இருக்கும் என்றால் சரிதான். அந்த இடம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி சொத்தை அபகரிக்க மோசடியாக ஆவணங்களை தயார் செய்து, வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. திருத்தப்பட்ட வழக்குரையில் பொய்யான நான்கெல்லைகள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள மனை பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதால் தான் வசதி உரிமை மட்டும் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அகரத்தெரு என்பது புல எண் 321/5 இல் உள்ளது என்றால் சரிதான்.

அகரத்தெருவில் எந்த மூங்கில் குத்துக்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தில் உரிமையும், அனுபவமும் இல்லாத நான், இவ்வழக்கை தாக்கல் செய்ய தகுதியில்லை என்றாலும், வழக்கு சொத்தின் உரிமையாளர் மீதே தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றாலும், வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றாலும், செயலுறுத்துக்கட்டளை பெறுவதற்கான முழு விபரங்களை அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. என் வீட்டிற்கு கிழக்கில் உள்ள பாதையை நான் பயன்படுத்தலாம் என்றாலும், பிரதிவாதி சொத்தை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.